### சென்னை மாநகராட்சி சார்பில் கொருக்குப்பேட்டையில் ரூ. 96.04 கோடியில்

# புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம் - முதல்வர் நாளை திறந்து வைக்கிறார்!

## அமைச்சர்கள் கே.என். நேரு – பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு!





சென்னை,பிப்.11-

வடசென்னை பகுதி மக்களின் நீண்ட கால தேவையினை நிறைவேற்றிடும் வகையில் கொருக்குப்பேட்டைமணலி சாலையில் போக்குவரத்து நெரிசலை வெகுவாக குறைத்திடும் வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நாளை 12.02.2026 பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தண்டையார்பேட்டை மண்டலம், கொருக்குப்பேட்டை மணலி சாலையில் இரயில்வே 2பி சந்திக்கடவில் ரூபாய் 96.04 கோடி மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தினை திறந்து வைக்கப்பட வுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாடுப் பணிகள் குறித்து நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (10.02.2026) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், கொருக்குப்பேட்டையில் இருந்து எண்ணூர் செல்லும் சாலையில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடும் வகையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.75 கோடி மதிப்பீட்டில் கொருக்குப்பேட்டைஎண்ணூர் 2ஏ புதிய மேம்பாலம் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வருகின்ற 12.02.2026 அன்று அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைக்கப்படவுள்ளதை முன்னிட்டு, முன்னேற்பாட்டுப் பணிகள் தொடர்பாக, அமைச்சர் பெருமக்கள் இன்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜே.ஜே எபினேசர் (ஆர்.கே நகர்), ஆர்.டி.சேகர் (பெரம்பூர்), மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ண மூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 356 வது நாள்!

## அம்பத்தூர் வடக்கு பகுதியில் உணவு வழங்கப்பட்டது!



சென்னை,பிப்.11-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 356 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (10.2.2026), அம்பத்தூர் வடக்கு பகுதி: 1) வட்டம் 80, புதூர் தாங்கல் மெயின் ரோடு, சேரன் தெரு, அம்பத்தூர். 2) வட்டம் 81, அம்பத்தூர் OT பேருந்து நிலையம் அருகில், அம்பத்தூர். ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, எஸ்.பி. ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், பி.கே. மூர்த்தி.எம்.சி, டாக்டர்.ஜி சாந்தகுமாரி எம்.சி, எல்.பி.எஃப். மோகன், டாக்டர் பூர்ணிமா எம்.சி, ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, து.ஆயிரம், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி. அம்பத்தூர் வடக்கு/தெற்கு/கிழக்கு வட்ட கழக செயலாளர்கள்: வி.ரவிந்தி ரன், பு.வீரா(எ) வீரராகவன், வெ. ராதாகிருஷ்ணன், த. கண்ணபிரான், எம்.கமல் எம்.சி, டி.பிரகாஷ் தயாளன், சி.சீனிவாசன், எம்.ஈ. சேகர் எம்.சி, நா.நெப்போலியன், ஆர்.டீக்கா, மு. சண்முகம், ஆ.சுந்தரராஜ், லோகநாதன், சு.மோகன் குமார், மு.விஜயகுமார், த.வ.லால், பி.செந்தில். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, S. முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம. அசோக்குமார், L.சம்பத் குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் மஞ்சளுக்கான மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பதில் இரட்டை வேடம்!

## மஞ்சள் விவசாயிகளை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய அரசுக்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!



புதுடெல்லி, பிப்.11-

இந்தியா அளவில் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி இடமும், தமிழ்நாடு அளவில் முதல் இடமும் வகிக்கும் சிறப்பு பெற்றது ஈரோடு மாவட்டம். இங்கு ஆண்டுக்கு 1.25 லட்சம் டன்களுக்கு மேல் மஞ்சள் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், ஈரோடு மஞ்சள் புவிசார் குறியீடும் பெற்றுள்ளது.

இத்தகைய ஈரோட்டில் மஞ்சள் வாரிய மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பது தொடர்பான கேள்வியை, நாடாளுமன்றத்தில் மீண்டுமொரு முறை ஒன்றிய அரசிடம் ஈரோடு கே.இ.பிரகாஷ் எம்.பி. கேள்வி எழுப்பியிருந்தார். இதில் மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய பிரதிநிதித்துவம் வழங்குவது குறித்தும் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்துள்ள பதில்கள், தனித்துவமும் உயர்ந்த ஈரோட்டு மஞ்சளை அவர்கள் தரக்குறைவாக ஈரோடு உள்ளிட்ட தமிழ்நாட்டு மஞ்சள் புகழும் பெற்ற அணுகுவதையும், விவசாயிகளுக்கு திட்டமிட்டு ஓரவஞ்சனை இழைப்பதையும் வெளிக்காட்டியுள்ளன.

**ஒன்றிய அரசின் இரட்டை வேடம்**

ஈரோடு மக்களின் பிரதிநிதியாக, ஒன்றிய அரசின் இந்த அகம்பாவத்தை வன்மையாக கண்டிக்கிறேன்.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு அளித்துள்ள பதிலில், "ஈரோட்டில் மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகம் மற்றும் ஆய்வகம் அமைப்பது பரிசீலனையில் மட்டுமே உள்ளது" என்று தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதம் ஈரோட்டுக்கு வருகை தந்த ஒன்றிய வேளாண் அமைச்சர் சிவராஜ்சிங் சௌகான் அவர்கள், "ஈரோட்டில் விரைவில் தேசிய மஞ்சள் வாரியத்தின் மண்டல அலுவலகம் மற்றும் சர்வதேச தரத்திலான ஆய்வகம் அமைக்கப்படும்" என்று அறிவித்தார். ஆனால், தற்போது 'அது உறுதியல்ல, பரிசீலனையில் மட்டுமே உள்ளது' என்று கூறியுள்ளது ஒன்றிய அரசு.

இது ஒன்றிய அரசு ஆடும் இரட்டை வேட நாடகம் மட்டுமே.

**உதவாத நறுமணப் பொருட்கள் வாரியம்**

"ஈரோட்டில் ஏற்கனவே நறுமணப் பொருட்கள் வாரியத்தின் (Spices Board) அலுவலகம் இருக்கிறது" என்று பதிலளித்து, புதிய மஞ்சள் வாரிய மண்டல அலுவலகத்தையும் ஆய்வகத்தையும் தவிர்க்க முயல்கிறது ஒன்றிய அரசு. ஆனால், நறுமணப் பொருட்கள் வாரியம் ஈரோடு மஞ்சள் விவசாயிகளுக்கு எவ்விதப் பயனும் அளிக்கவில்லை என்பதே நடைமுறை உண்மை.

இந்த நறுமணப் பொருட்கள் வாரியம் பெரும்பாலும் ஏலக்காய், மிளகு, மிளகாய் போன்ற பயிர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கிறது. மஞ்சளுக்கான பிரத்யேகத் தேவைகளை அது துளியும் பூர்த்தி செய்வதில்லை. மிக முக்கியமாக, ஈரோட்டில் உள்ள மசாலா வாரிய அலுவலகத்திற்குச் சுயமாக முடிவெடு க்கும் அதிகாரமும் கிடையாது. இந்த அதிகாரம் கொச்சி தலைமை அலுவலகத்திற்கே உள்ளது.

இப்படி நறுமணப் பொருட்கள் வாரியத்தை, மஞ்சள் அமைப்புகளுக்கு நிகராக நிறுத்தி ஒன்றிய அரசு பேசுவது, ஈரோட்டு மஞ்சள் விவசாயிகளின் நெஞ்சில் குத்தும் செயல்.

**மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரம் இல்லை**

தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரம் வழங்குவது குறித்தும், ஒன்றிய அரசு தெளிவற்ற பதில்களையே அளித்துள்ளது.

பொதுவாக, பயிர்களுக்கு வாரியம் அமைக்கையில், அதிக உற்பத்தி செய்யும் மாநிலங்களுக்கு (Principal Growing States) முன்னுரிமை அளிக்க வேண்டும். இதற்கு உதாரணமாக, தேயிலை வாரியம், காஃபி வாரியம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். ஆனால், மஞ்சள் வாரியத்தை அமைத்தபோது, தமிழ்நாடு அதில் முக்கியத்துவம் பெற்றுவிடக்கூடாது என்பதற்காகவே, 'சுழற்சி முறை' என்ற நாடகத்தை அரங்கேற்றியது ஒன்றிய அரசு.

தற்போது இந்த சுழற்சி முறையிலும், தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை.

ஒன்றிய அரசு தனது மழுப்பலான பதில்களையும், இரட்டை வேட அரசியலையும் நிறுத்திக் கொண்டு, ஈரோட்டிற்கு விரைவில் மஞ்சள் வாரிய அலுவலகம் மற்றும் ஆய்வகத்தை கொண்டுவர வேண்டும். தேசிய மஞ்சள் வாரியத்தில் தமிழ்நாட்டிற்கு உரிய அங்கீகாரத்தையும் வழங்க வேண்டும்.

அதுவரை நாடாளுமன்றத்திலும் மக்கள் மன்றத்திலும் எமது குரல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் தெரிவித்துள்ளார்.

### காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் நாளை

# ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் அறிவிப்பு!



ஒன்றிய பட்ஜெட்டில் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க.வையும் - துணை போகும் அ.தி.மு.க.வை கண்டித்து பிப்12 காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் சட்டமன்ற தொகுதி வாரியாக ஒன்றிய அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் கீழ்கண்டவாறு நடைபெற உள்ளது.

| நாள் / நேரம் 12.02.2026 | சட்டமன்ற தொகுதி | நடைபெறும் இடம் |
|---|---|---|
| மாலை 5.30 மணி | காஞ்சிபுரம் | BSNL அலுவலகம் எதிரில் காஞ்சிபுரம் |
| மாலை 5.00 மணி | உத்திரமேரூர் | பேருந்து நிலையம் வாலாஜாபாத் |
| மாலை 4.00 மணி | மதுராந்தகம் | தேரடி அருகில் மதுராந்தகம் |
| மாலை 4.00 மணி | செய்யூர் | பஜார் வீதி செய்யூர் |

எனவே, சம்மந்தப்பட்ட மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கட்சிகளின் நிர்வாகிகளுக்கு முறையாக தகவல் தெரிவித்து கண்டன ஆற்பாட்டத்தில் பெருந்திரளாக பங்கேற்றிட ஏற்பாடு செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர் எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.

### சைபர் குற்றங்களின் அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல் தொடர்பாக

# இந்திய குடும்பங்களின் புகார்கள் மீது எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி !



புதுடெல்லி, பிப்.11-

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள இரா.கிரிராஜன், வெளிநாட்டில் வசிக்கும் இந்திய குடும்பங்களிடமிருந்து இணையதள குற்றங்கள் தொடர்பான மிரட்டல் மற்றும் அச்சுறுத்தல் குறித்து புகார்கள் வந்துள்ளனவா? கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில வாரியாக பதிவான அத்தகைய வழக்குகளின் எண்ணிக்கை என்ன? இந்திய சமூக நல நிதியத்தின் (ICWF) கீழ் ஆதரவு உட்பட என்ன மாதிரி தற்போதுள்ள கொள்கை கட்டமைப்பு உள்ளது? பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கருணையுடன் கூடிய மற்றும் குறைவான விலையில் உதவி கிடைப்பதை உறுதி செய்வதற்காக, நாடு திரும்பும் நடைமுறைகள், நிதி உதவி மற்றும் தூதரக வழிகாட்டுதல்களை மறுபரிசீலனை செய்ய, நெறிப்படுத்த மற்றும் வலுப்படுத்த மேற்கொண்ட முன்னெடுப்புகள் என்ன? என்ற கேள்விகளை வெளியுறவு துறை அமைச்சரிடம் எழுப்பி இருந்தார்.

இவற்றுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் வெளியுறவு துறை இணை அமைச்சர் கீர்த்தி வர்தன் சிங் பதில் அளித்துள்ளார்.

கடந்த 2021 - 2025ஆம் ஐந்து ஆண்டுகளில், 2021ல் புகார்கள் ஏதும் வரவில்லை என்றும், அடுத்த 4ஆண்டுகளில், சைபர் அச்சுறுத்தல் மற்றும் மிரட்டல் தொடர்பாக வெளிநாடுகளில் வசிக்கும் இந்திய குடும்பங்களிட மிருந்து 5,990 புகார்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அவற்றில் மியான்மர் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளிலிருந்து தலா 2200க்கும் மேற்பட்ட புகார்கள் வந்துள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

வெளிநாடுகளில் உள்ள இன்னலில் சிக்கியுள்ள இந்தியர்களை சென்றடைய அரசாங்கம் பல வழிமுறைகளை அமைத்துள்ளதாகவும், அவற்றில் மின் குடியேற்ற வலை போர்டல், MADAD போர்டல், பிரவாசி பாரதிய பீமா யோஜனா, பிரவாசி பாரதிய சஹாயத மையங்கள், 24x7 உதவி மையங்கள், இந்திய தூதரகங்களில் நடத்தப்படும் கூட்டங்கள் முக்கியமான வையாகும் என கூறப் பட்டுள்ளது.

வெளிநாட்டு இந்திய குடிமக்களுக்கான பல்வேறு நலன் புரியும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஏற்படும் தற்செயல் செலவினங்களை ஈடுகட்டவதற்காக உருவாக்கப்பட்ட ICWF அமைப்பின் வழிகாட்டுதல்கள் செப்டம்பர் 1, 2017 முதல் திருத்தப்பட்டு, இக்கட்டான சூழ்நிலை களில் உள்ள வெளிநாட்டு இந்திய குடிமக்களுக்கு உதவுதல், நலன் புரியும் நடவடிக்கைகள், தூதரக சேவைகளில் முன்னேற்றம் ஆகிய வற்றை நோக்கமாக கொண்டு செயல்படுகிறது.

இந்திய புலம்பெய ர்ந்தோர் அதிகமாக உள்ள நாடுகளில் சட்ட உதவி, கைதிகளை விடுவிப்பத ற்காக சிறிய குற்றங்களுக்கு அபராதம் செலுத்துதல் மற்றும் வெளிநாடுகளில் உள்ள துன்பப்படும் இந்தியப் பெண்களுக்கு உதவி செய்தல் ஆகியவையும் உள்ளடக்கியதாகும் என, தி.மு.க. எம்.பி. கிரிராஜன் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கப் பட்டுள்ளது.

### வேலூர் தெற்கு மாவட்டம்

### பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல்

# வேட்பு மனுத் தாக்கல்

## தலைமைக் கழக அறிவிப்பு

கடந்த 4.11.2025 அன்று கழக நிர்வாக வசதிக்காகவும் கழகப் பணிகள் செம்மையுற நடைபெற்றிடவும் வேலூர் மாவட்டம், வேலூர் வடக்கு, வேலூர் தெற்கு என இரண்டு மாவட்டங்களாக பிரிக்கப்பட்டதில், வேலூர் தெற்கு மாவட்டத்தில், மாவட்டப் பொருளாளர் பொறுப்பு நிரப்பப்பட வேண்டியிருப்பதால்,

வேலூர் தெற்கு மாவட்டம், பொருளாளர் பொறுப்புக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து 2026, பிப்ரவரி 17 (செவ்வாய் கிழமை) அன்று

ரூ.25000/வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.""

வேட்புமனுவினை முன்மொழிபவரும், வழிமொழிபவரும் வேலூர் தெற்கு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றிய/நகர/பகுதி/ பேரூர்ச் செயலாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்ட பிரதிநிதிகளாகத்தான் இருக்க வேண்டும்.

வேட்புமனு விண்ணப்பப் படிவம் ஒன்றுக்கு ரூ.1000/வீதம் கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 10.02.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### கழக சட்டதிட்ட விதி : 18, 19 மற்றும் 31-ன்படி

# தலைமைக் கழக நிர்வாகிகள் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

**தி.மு.க. செய்தித் தொடர்பு துணைத் தலைவராக திரு.ஏ.சுப்புரத்தினம்**, முன்னாள் எம்.எல்.ஏ., (எச்-16, ஆர்.எம்.காலனி, திண்டுக்கல்) அவர்களும்,

**தி.மு.க. வர்த்தகர் அணி துணைச் செயலாளர்களாக**

**திரு. பி.டி.செல்வகுமார்** (மணியா நகர், கொட்டாரம், கன்னியாகுமரி மாவட்டம்) **திரு. ஜெ. பாலகங்காதரன்.** முன்னாள் எம்.எல்.ஏ., (1/98, ஆலமரத்துப்பட்டி, சிவகாசி, விருதுநகர் மாவட்டம்) ஆகியோரும்;

தி.மு.க. மாணவர் அணி துணைச் செயலாளராக **திரு. ஆர்.சுரேஷ்குமார்** (திருச்செங்கோடு, நாமக்கல்) அவர்களும்;

தி.மு.க. சுற்றுச்சூழல் அணி துணைச்செயலாளராக **திரு. சங்கர் தருமன்** (புங்கம்பட்டி, சாப்பாத்தி, கிருஷ்ணகிரி மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. சட்டத்துறை துணைச் செயலாளராக **திரு. ஜெயக்குமார்** ( மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி, மதுரை மாவட்டம்) அவர்களும்;

தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணைச் செயலாளராக **திரு.என். சிவக்குமார்** (13/5, விவேகானந்தர் 2வது தெரு, மதிச்சியம், மதுரை 625 020.) அவர்களும்;

**தி.மு.க. சிறுபான்மையினர் நலஉரிமை பிரிவு மாநில துணைச் செயலாளராக திரு.எஸ். ஷேக் இஸ்மாயில்** (73/4, ஆதம் தெரு, அன்சாரி நகர் 7வது தெரு, மகபூப் பாளையம், மதுரை 625 016.) **அவர்களும் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்கள்.**

ஏற்கனவே நியமிக்கப்பட்டவர்களுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 10.02.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

# நீலகிரி மாவட்ட கழக அவைத் தலைவர் கே.போஜன் மகன் பி.உமாநாத் மறைவு!

## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

நீலகிரி, பிப்.11

நீலகிரி மாவட்ட கழக அவைத் தலைவர் கே. போஜன் அவர்களின் மகனும், மாவட்ட அயலக அணி அமைப்பாளருமான பி.உமாநாத் (கோத்தகிரி நகராட்சி துணைத் தலைவர்) அவர்கள் நேற்று (10.2.2026) காலை இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்து தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

மறைந்த அன்னாரின் உடலுக்கு கழகத்தினர் மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் உடல் நல்லடக்கம் இன்று (11.2.2026) மதியம் 1 மணியளவில் ஜக்கனாரை கிராமத்தில் நடைபெறுகிறது.

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியம், திருக்காட்டுப்பள்ளி பேரூரைச் சேர்ந்த த.திருஞானசம்பந்தம் - ஒரத்தநாடு தெற்கு ஒன்றியம், ஆம்பலாபட்டு வடக்கு கிராமத்தைச் சேர்ந்த சி.நேதாஜி - திருவையாறு வடக்கு ஒன்றியம், திருவையாறு பேரூரைச் சேர்ந்த மு.திபேஷ்பிரபா ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மீண்டும் கழகப் பணியாற்றிட அனுமதி அளிக்குமாறு, கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 10.02.2026.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### மதுரை மாநகர் மாவட்டம்

# எல்லீஸ் நகர் பகுதி, 61வது வட்டம் மற்றும் மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டம் ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், எல்லீஸ்நகர் பகுதி, 61வது வட்டக் கழகச் செயலாளர் பி.கே.செந்தில் அவர்கள் பகுதிக் கழகச் செயலாளராக பொறுப்பு வகிப்பதால், அவரை வட்டச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக திரு. க.சுரேஷ் (10சி, ஜவஹர் 1வது தெரு, எஸ்.எஸ்.காலனி, மதுரை-10) அவர்கள் 61வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

மேல மாசி வீதி பகுதி, 77வது வட்டச் செயலாளர் திருமுருகன் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற திரு.சோ.தஞ்சைமதி, (காஜா தெரு, எம்.கே.புரம், மதுரை-11) அவர்கள் 77வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 10.02.2026

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.